## சென்னை மாநகர வளர்ச்சியில் ஆர்வம் காட்டியவர்!

# அனைவரையும் பாசத்தால் கட்டிப் போட்டவர் ஏ.வி.எம். சரவணன்!

## படத்திறப்பு நிகழ்ச்சியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஜன. 5 -**

**“சென்னை மாநகர வளர்ச்சியில் ஆர்வம் காட்டியவர்; அனைவரையும் பாசத்தால் கட்டிப் போட்டவர் ஏ.வி.எம்.சரவணன் அவர்கள் என்று அவரது படத்தைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலன் அவர்கள் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2026) சென்னை, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற, மறைந்த திரைப்பட தயாரிப்பாளர் ஏ.வி.எம்.சரவணன் அவர்களின் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்கம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு:

வரலாற்றில் தமிழ் திரைவுலகத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால், அதில் நிச்சயமாக ஏ.வி.எம். நிறுவனத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்கவே முடியாது. ‘மெய்யப்ப செட்டியார்’ என்று அன்போடு அழைக்கப்படக்கூடிய இன்னும் சொல்ல வேண்டும் என்றால் அவரை எல்லோரும் அப்பச்சி, அப்பச்சி என்றுதான் செல்லமாக மரியாதையோடு, தைரியமாக அழைப்பதுண்டு. அவருடைய மறைவிற்குப் பிறகு திரு. சரவணன் அவர்கள் இந்நிறுவனத்தை எப்படியெல்லாம் கட்டிக் காத்திருக்கிறார் என்பதைப் பற்றி அவரோடு நெருங்கிப் பழகியிருக்கக்கூடிய அண்ணன் எஸ்.பி. முத்துராமனாக இருந்தாலும் சரி, நம்முடைய சூப்பர் ஸ்டாராக இருந்தாலும் சரி, கலைஞானியாக இருந்தாலும் சரி, நம்முடைய கவிஞர் வைரமுத்துவாக இருந்தாலும், அவர்கள் பேசுகின்ற போது பல்வேறு செய்திகளையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

**‘பராசக்தி’ வசனத்தைப் பேசி பரிசு பெற்றவர்!**

நம்முடைய சரவணன் அவர்கள் பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது, அந்தப் பள்ளியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கலந்துக்கொண்டு, முதல் பரிசு பெற்றிருக்கிறார். எதற்காக பரிசு பெற்றிருக்கிறார் என்றால், முதன்முதலில் கலந்துகொண்ட பேச்சுப் போட்டியில் ‘பராசக்தி’ வசனத்தைப் பேசித்தான் வெற்றி பெற்று, பரிசையும் பெற்றிருக்கிறார்.

1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, அப்போது சென்னையில் அரசின் சார்பில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற போது திரு. ஏ.வி.மெய்யப்பன் அவர்கள் ஏ.வி.எம் ஸ்டூடியோவில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த விருந்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள், அமைச்சர் பெருமக்களெல்லாம் அந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்போது, ஏ.வி.எம். ஸ்டுடியோவில் காத்திருந்த கிருஷ்ணன் பஞ்சு அவர்கள் நம்முடைய சரவணன் அவர்களை தலைவர் கலைஞரிடத்தில் அப்போது தான் அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறார். அதற்குப் பிறகு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2026) சென்னை, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற, மறைந்த திரைப்பட தயாரிப்பாளர் எம்.சரவணன் அவர்களின் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்கம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவரது திருவுருவப் படத்தை திறந்துவைத்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து குழும நிறுவனத்தின் இயக்குநர் என்.ராம், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், நாடாளுமன்ற உறுப்பினர் கலைஞானி கமல்ஹாசன், கவிப்பேரரசு வைரமுத்து, நல்லி குப்புசாமி, இயக்குநர்கள் எஸ்.பி.முத்துராமன், வி.சி. குகநாதன், ஏ.வி.எம். குடும்பத்தைச் சார்ந்த எம். பாலசுப்ரமணியம், எம்.எஸ். குகன், திருமதி அருணா குகன் ஆகியோர் உடனிருந்தனர்.

1972இல் திரு. சரவணன் அவர்கள் ‘ஹலோ மெட்ராஸ்’ மாத இதழைத் தொடங்கியபோது, அதன் முதல் இதழை தலைவர் கலைஞர் அவர்கள்தான் வெளியிட்டார்கள். 1975ஆம் ஆண்டு ஏ.வி.எம். ஸ்டூடியோவில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. அந்த வேலைநிறுத்தம் நடைபெற்றபோது தலைவர் கலைஞர் அவர்கள்தான் அதில் முழுமையாக ஈடுபட்டு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்தித் தந்திருந்தார்கள்.

**ஏ.வி.எம். நிறுவன பொன் விழாவில் பங்கேற்ற தலைவர் கலைஞர்!**

அதேபோல், ஏ.வி.எம். நிறுவனத்தின் பொன்விழா நடைபெற்றபோது, தலைவர் கலைஞர் அவர்கள் அந்த விழாவில் பங்கேற்று உரையாற்றியது மட்டுமல்ல, மேடையில் நின்று கொண்டே அங்கிருக்கக் கூடியவர்களுக்கு 190 கேடயங்களை தலைவர் கலைஞர் அவர்களே தன்னுடைய கரங்களால் வழங்கியிருக்கிறார்கள்.

ஏ.வி.எம். அவர்களுடைய நூற்றாண்டு விழா தொடக்கத்தில், ஃபிலிம் சேம்பரில் இன்றைக்கு நீங்கள் பார்க்கக்கூடிய திருவுருவச்சிலையை தலைவர் கலைஞர் அவர்கள் தான் திறந்து வைத்திருக்கிறார்கள். எதற்காக இதையெல்லாம் சொல்கின்றேனென்றால், கலைஞருடைய குடும்பத்திற்கும், கலைஞருக்கும், ஏ.வி.எம். குடும்பத்திற்கும் எந்தளவிற்கு நெருக்கம் இருந்திருக்கிறது, தொடர்பு இருந்திருக்கிறது என்பதற்கு இதெல்லாம் உதாரணங்களாக இருக்கிறது என்பதற்காக தான் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன்.

**சென்னையின் வளர்ச்சிக்கு அறிவுரை வழங்கிய சரவணன்!**

நான் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபோது கடற்கரையில் நடைபயிற்சிக்குச் செல்வதுண்டு. அப்போது நம்முடைய சரவணன் அவர்களும் அவருடைய நண்பர்களோடு நடைபயிற்சிக்கு வருவார்கள். நான் அடிக்கடி அவரை சந்தித்துப் பேசுவதுண்டு. சென்னையெல்லாம் எப்படி இருக்கிறது, எப்படி அதை டெவலப் செய்ய வேண்டும் என்றெல்லாம் அறிவுரைகளை சொல்லியிருக்கிறார்.

நான் மேயராக பொறுப்பேற்ற பிறகு போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக சென்னையில் 10 பாலங்களை கட்டினேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்தப் பாலங்கள் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு நான் நேரடியாகச் சென்று அழைப்பிதழ் கொடுத்ததில்லை, தபால் மூலம் அனுப்பி வைத்துவிடுவோம். ஆனால், அதை பார்த்துவிட்டு, நிகழ்ச்சி தொடங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே அந்த நிகழ்ச்சிக்கு வருகைபுரிந்து முன் வரிசையில் அமர்ந்திருப்பார். நான் ஆச்சரியப்படுவது உண்டு. நான் பல நேரங்களில் அவரை மேடைக்கு அழைப்பதுண்டு. ”இல்லை, இல்லை நான் அங்கேயே இருக்கிறேன். சென்னை மாநகர மக்களுக்கு இது முக்கியம். அதனால் தான் நான் இதை முக்கியம் என்று கருதி நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்” என்று என்னிடத்தில் அடிக்கடி தெரிவிப்பார்.

**காலத்திற்கேற்ற மாற்றங்களை கொண்டு வருவதில் ஆர்வம் கொண்டவர்!**

அதுமட்டுமல்ல. நான் மேயராகப் பொறுப்பேற்றிருந்தபோது மாநகராட்சியில் படித்துக்கொண்டிருக்கும் பள்ளி மாணவர்களையெல்லாம் விமானத்தில் திருப்பதி வரை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ‘ஏர் இந்தியா’ மூலம் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சிக்குக் காரணமே நம்முடைய ஏ.வி.எம். சரவணன் அவர்கள்தான். அவரும் என்னுடன் வந்தார்கள். விமானத்தில் சென்றுகொண்டிருந்தபோது நாங்கள் பேசிக்கொண்டிருந்த பல விஷயங்கள் இப்போதும் என்னுடைய நினைவில் பசுமையாக இருக்கிறது. முதலிலெல்லாம் கூத்து நிகழ்ச்சிகள் இருந்தன, அதன் பிறகு, நாடகம் வந்ததற்குப் பின் கூத்து மறந்து போய்விட்டது. சினிமா வந்த பிறகு நாடகம் காணாமல் போய்விட்டது. அதுபோல், ஒவ்வொன்றும் அந்தந்த நேரத்தில் வருகின்றபோது அதற்கு தகுந்தாற்போல் நாம் மாற்றிக்கொள்ள வேண்டுமே தவிர இதையெல்லாம் பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சாதாரணமாக சொன்னார். நான் அதையெல்லாம் இப்போது நினைத்து பார்க்கிறேன்.

காலத்திற்கேற்ற மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்பதில் அவர் ஆர்வம் காட்டினார். அந்த வகையில் எனக்கு அறிவுரைகள், ஆலோசனைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

**மட்கும் குப்பை, மட்காத குப்பை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்!**

2006ல் ஏ.வி.எம். அவர்களுடைய அஞ்சல் தலையை தலைவர் கலைஞர் அவர்கள் தான் வெளியிட்டிருக்கிறார்கள். அதேபோல், 2023ஆம் ஆண்டு இதே ஏ.வி.எம். ஸ்டூடியோவில் ஹெரிட்டேஜ் மியூசியத்தை வைத்திருக்கிறோம், நீங்கள் வரவேண்டும் என்று என்னை அழைத்தார்கள், நான் உடனடியாக வந்தேன். நிகழ்ச்சிக்கு நானும், கமல் அவர்களும்தான் வந்தோம். அப்போது, நிறைய நேரம் பேசிக்கொண்டிருந்ததையெல்லாம் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

அதுமட்டுமல்ல, 2006ஆம் ஆண்டு தூய்மைப் பணிகளை மேற்கொள்ள சிங்கப்பூரிலிருந்து ஓனிக்ஸ் என்ற கம்பெனியை வரவழைத்து அந்த பணிகளை செய்வதற்காக ஈடுபடுத்தியபோது, இதை திரையரங்கத்தில் எப்படியாவது பிரச்சாரம் செய்ய வேண்டும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவரே முன்னின்று அதில் யார் யார் நடிக்க வேண்டும் என்று முடிவு செய்து நடிகை மனோரமா அவர்களையும், தாடி பாலாஜி அவர்களையும் அழைத்து அந்தக் காணொலியை எடுத்து எல்லா திரையரங்கத்திலும் போட்டுக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். மட்கும் குப்பை, மட்காத குப்பை என்பதை விழிப்புணர்வோடு மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய அந்தப் பணியை நிறைவேற்றித் தந்ததற்காக நினைத்துப் பார்க்கிறேன்.

**அன்பின் காரணமாக கைகட்டி நிற்கிறார்!**

நீங்கள் திறந்து வைக்கப்பட்ட படத்தைப் பார்க்கலாம். கை கட்டி இருக்கின்ற அந்த காட்சி. எல்லோரும் கை கட்டுகிறோம். ஆனால், அவர் கை கட்டி நிற்பதுதான் இன்றைக்கும் அனைவரின் நினைவிலும் பரவலாக இருந்துகொண்டு வருகிறது. அதை இன்றைக்கு நினைத்துப் பார்க்கிறோம். ஏதோ பயத்தின் காரணமாக அல்ல, அன்பின் காரணமாக, பாசத்தின் காரணமாகத் தான் அவர் அவ்வாறு கை கட்டி நிற்கின்றார்.


இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அவர் நம்மையெல்லாம் பாசத்தோடு கட்டிப்போட்டு வைத்ததால்தான் அவ்வாறு கை கட்டி நின்று நமக்குப் பாடமாகியிருக்கிறார். அவருடைய புகழ் வாழ்க! வாழ்க! வாழ்க! என்று சொல்லி நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## ஏப்ரல் விருப்பம்!

இல்லங்களின் உள்ளங்கள் குளிர
“மகளிர் உரிமைத் தொகை” முதல்
“மகளிர் விடியல் பயணம்”
“நான் முதல்வன் திட்டம்”
“புதுமைப் பெண் திட்டம்” என
விரல் விட்டு எண்ண முடியாத அளவுக்கு எண்ணற்ற திட்டங்களால் தமிழக மக்களின் எண்ணங்களை வென்று
“திராவிட மாடல் ஆட்சியே 2026லும் நீட்சியாக வேண்டும்” என்னும்
மக்களின் ஏக போக விருப்பத்தை
திசை திருப்ப
விதிவிலக்காக நிகழும் விரும்பத்தகாத சம்பவங்களை கோர்த்துக் கொண்டு
அதனை
ஆட்சிக்கு எதிரான அவதூறு களாக்கும் மலிவான அரசியலை
சிலர் முன்னெடுக்கிறார்கள்..
ஆனால் இதனை
மக்களே முறியடிப்பார்கள்.
எத்தனை சூழ்ச்சிகளை
கையாண்டாலும் எதிராளிகளுக்கு
முட்டாள் மாதமாகவும்
எங்களுக்கு மிட்டாய் மாதமாகவும்
வரவிருக்கும் ஏப்ரல் மாதம் அமையும்
என்பது நிச்சயம்...





**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

---

தாம்பரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

## பம்மல் நல்லதம்பி 10ஆம் ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி! நல உதவிகள்!

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

*சென்னை ஜன:5*



காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பம்மல் நல்லதம்பி அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று ( 5.1.2026 திங்கள் கிழமை ) காலை 8 மணி அளவில் இம்மானுவேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள மனோ அரங்கத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தலைமை வகித்து பம்மல் நல்ல தம்பி அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இதில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர், மண்டல குழு தலைவர் வே. கருணாநிதி உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் கழகத்தின் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தாம்பரம் மாநகர சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் ந.பம்மல் இன்பராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## அவலூர்பேட்டையில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு செய்தார்!

*செஞ்சி, ஜன. 5 -*

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் புதிய வாக்காளர் பெயர் சேர்ப்பு முகவரி மாற்றம் நீக்கம் தொடர்பான கோரிக்கைகளுக்கு மனு அளிக்க 2026 ஜனவரி 18ஆம் தேதி வரை கால அவகாசம் உள்ளது. இதற்காக கடந்த மாதம் 27,28 தேதியும், சிறப்பு முகாம் நடைபெற்றது.

மேலும நேற்று முன்தினம் 3ஆம் தேதியும், நேற்று 4ஆம் தேதியில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்தது.


விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி சட்டமன்றத் தொகுதி மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர் பேட்டை,

செஞ்சி ஒன்றியம் ஊரணி தாங்கல்ஊராட்சியில் உள்ள அரசு பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாமினை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பம்மல் நல்லதம்பி**
**சனவரி 5 (2016)**



**தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, 1963ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்டத்தில், சைதை வட்டக் கழகச் செயலாளராக 1968 முதல் 1972 வரை கழகப் பணியாற்றியவர்.**

**பம்மல் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறையும் – பரங்கிமலை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராகவும் – பம்மல் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**1980ல் கழகத்தின் சார்பில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, நெருக்கடிகால மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**